**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 29.09.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையம் "அக்ரி–பிசினஸ் எக்ஸ்போ 2025" –இல் பங்கேற்பு

தமிழ்நாடு அரசு சார்பில், “அக்ரி–பிசினஸ் எக்ஸ்போ 2025” செப்டம்பர் 27 மற்றும் 28, 2025 அன்று நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வணிக வளாகத்தில் வேளாண் கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) பங்கேற்று, மையத்தில் உருவாக்கப்பட்ட புதுமையான தயாரிப்புகள் மற்றும் ஆராய்ச்சியினை காட்சிப்படுத்தியது. மேலும், வேளாண் மேம்பாட்டிற்கான ஆராய்ச்சி முடிவுகளை வணிகரீதியாக மாற்றும் நோக்கில், நிதி வழிகாட்டுதல்இ வளர்ச்சி ஆதரவு மற்றும் சந்தை இணைப்புகள் போன்ற முக்கிய ஆதரவுகளை வழங்குவதன் மூலம், இளம் திறமையாளர்களையும் தொழில்முனைவோர்களையும் உருவாக்கும் ஒருங்கிணைந்த மையமாக உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் செயல்படுகிறது.

உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் தனது ஆராய்ச்சி பயன்பாட்டாளர்களான (Cabin Space users) M/s.அவிவா ஆர்கானிக்ஸ், M/s.ஜிவிட் டெக்னாலஜி, M/s.தென்னைவனம், M/s.சக்தி பெர்டிலைசர, M/s.கிராப் ட்வின் அக்ரோடெக் பிரைவேட் லிமிடெட் மற்றும் M/s.மெரிடியன் மெசின் வொர்க்ஸ் ஆகிய வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள் தங்களது புதுமையான தயாரிப்புகளை விவசாயிகள், பொது மக்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுக்கு காட்சிப்படுத்தினர். இந்நிகழ்வு, பல தொடக்க வேளாண் நிறுவனங்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இக்கண்காட்சியில் பல தொடக்க வேளாண் நிறுவனங்களும், கண்டுபிடிப்பாளர்களும் உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையத்துடன் இணைந்து அவர்களது ஆராய்ச்சியினை மேம்படுத்துவதற்காக ஆர்வமுடன் பதிவு செய்ய முன்வந்தனர்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இரா.தமிழ்வேந்தன் மற்றும் உயிர்தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குநர் முனைவர் ந.செந்தில் ஆகியோர் இக்கண்காட்சியில் கலந்துகொண்டு, உயிர்தொழில்நுட்ப மகத்துவ மைய குழுவினரையும், பங்கேற்ற தொடக்க வேளாண் நிறுவனங்களையும் பாராட்டி ஊக்குவித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**